**O.S. No.191/2024**
**Date : 13.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW 1 **திருமதி. லட்சுமி**

**குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்கிறேன். பஞ்சு மில் ஓட்டிக் கொண்டிருக்கிறேன். எனது தம்பியும், நானும் சேர்ந்து அந்தப் பஞ்சு மில்–ஐ நடத்தி வருகிறோம். எனது தம்பி பெயரில் அது சம்பந்தமான உரிமம் உள்ளது. மில்லில் வரும் வருமானத்தை நானும், எனது தம்பியும் சேர்ந்துதான் வருமான வரி கணக்கில் காட்டுவோம் என்றால் எனது தம்பி பெயரில் மட்டும் தான் அதை வருமானத்தில் காட்டுவோம். வெங்கடாசலபுரத்தில் விவசாய நிலம் உள்ளது அதை குத்தகைக்கு விவசாயம் செய்கிறேன், எனது பெயரில் சொந்தமாக நிலம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

2. எழுத்துப்பூர்வமாக குத்தகை ஒப்பந்தம் எதுவும் ஏற்படவில்லை, வாய்மொழியாகத்தான் குத்தகை ஏற்படுத்திக் கொண்டோம். இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் எனது வருமானம் குறித்து கேள்வி கேட்பார்கள் என்ற பின்யோசனையின் காரணமாக தற்போது எனது சகோதரருடன் சேர்ந்து நான் மில் நடத்தி வருவதாகவும் குத்தகைக்கு நிலம் வைத்திருப்பதாகவும் பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதில் நான் மில் நடத்தி வந்ததாக சொல்லும் விவரமோ அல்லது குத்தகைக்கு நிலங்கள் வைத்து விவசாயம் செய்து வந்ததாக சொல்லும் விபரமோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

3. ஸ்ரீரங்கபுரம் சென்ட்ரல் வங்கி மற்றும் கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிகளில் நான் கணக்கு வைத்துள்ளேன். எனக்கு ஆண்டு வருமானம் என்பது ரூ.25000 வரை வரும். இது இல்லாமல் நான் வேறு ஏதேனும் தொழில் செய்கிறேனா என்றால் வட்டிக்கு பணம் கொடுக்கிறேன். ரூ.10 லட்சம், ரூ.5

லட்சம் ஆகிய தொகைகளை நான் வட்டிக்கு கொடுப்பேன். சுமார் பத்து நபர்களுக்கு நான் தற்போது வட்டிக்கு பணம் கொடுத்திருப்பேன். நான் இது சம்பந்தமாக வருமான வரி செலுத்துகிறேனா என்றால் நான் செலுத்துவது கிடையாது. அரசின் உரிய அனுமதி பெறாமல் கந்து வட்டி கொடுப்பது தவறு என்றால் சரியல்ல, நான் கந்துவட்டி கொடுப்பது கிடையாது.

4. எனக்கு 2019–ஆம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகளை தெரியும். 2–ம் பிரதிவாதியான பிரேமா என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சரவணன் என்ற ஒரு பைனான்சியரிடம் அவர் வேலை செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். எனக்கு 2–ம் பிரதிவாதி பிரேமாவின் பெற்றோர்கள் பெயர் தெரியுமா என்றால் அவரது அம்மாவை எனக்கு தெரியும், அவர் பெயர் எனக்கு தெரியாது, அவரது தந்தை இல்லை.

5. 3–ம் பிரதிவாதியான முத்து ஹரீஸ் என்ன படித்திருக்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர் வெளிநாட்டிற்கு வேலைக்காக தான் பணம் கேட்டார்கள். வெளிநாட்டுக்கு போவதற்கு பணம் வேண்டும் என்ற காரணத்தை சொல்லித்தான் பணம் கேட்டு புரோநோட் எழுதப்பட்டது என்றால் சரிதான். இந்த கடனுக்கு முன்பு பிரதிவாதிகளிடம் கடன் எதுவும் வாங்கினார்களா என்றால் அவ்வாறு வாங்கவில்லை. குடும்பத்தில் வந்த பாகப்பிரிவினை மூலம் எனக்கு பணம் கிடைத்ததாகவும் அந்த பணத்தைக் கொண்டுதான் நான் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்ததாகவும் பிராதில் சொல்லியுள்ளேன்.

6. 1996 ஆம் ஆண்டு எனது தந்தை இருக்கும்போது அவர் சொத்தை விற்று எனக்கு ரூ.5 லட்சம் பணம் கொடுத்தார். 2011 ஆம் ஆண்டு எனது அப்பாவின் வயல் காட்டை நாங்கள் விற்றபோது எனக்கு ரூ.4 லட்சம் பணம் கிடைத்தது. 2021 ஆம் ஆண்டு எனது அண்ணன் தனது நிலங்களை விற்றபோது எனது பங்கு என்று ரூ.20 லட்சம் பணம் கொடுத்தார். பணம் கொடுத்தது தொடர்பாக பாகப்பிரிவினை பத்திரம் எழுதும் எழுதிக்கொண்டோமா

என்றால் வாய்மொழியாக மட்டுமே பேசிக்கொண்டோம், ஆவணங்கள் எதுவும் எழுதவில்லை.

7. எனது அப்பா விற்பனை செய்த கிரைய ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்ய முடியும். எனது பெற்றோர்கள் பெயர் குருவம்மாள், நாராயணசாமி. எனது உடன்பிறந்தவர்கள் கங்காதேவி, ராமசாமி சேது ராஜன், ராமலக்ஷ்மி மற்றும் நான். எங்களுக்கு குன்னூர், தப்புக்குண்டு, தாடிச்சேரி கோவிந்நகரம் ஆகிய இடங்களில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அதில் மொத்தம் மூன்று விவசாய நிலங்களும், இரண்டு வீடுகளும் இருந்தது என்றால் சரியல்ல. ஒரு வீடு மட்டுமே இருந்தது.

8. மேற்கண்ட சொத்துக்களை விற்பனை செய்தது எனது தந்தை எனக்கு பணம் கொடுத்ததாகவும், எனது சகோதரர் எனக்கு பணம் கொடுத்ததாகவும் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். எனது சகோதரன் திரு.சேதுராஜன் என்பவர் தேனி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.491/2006 எங்கள் குடும்ப சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்து அது இன்றளவில் நிலுவையில் உள்ளதென்றால் சரிதான், நானும் அந்த வழக்கில் தரப்பினர் என்றால் சரிதான்.

9. அசல் வழக்கு எண். 112/2018 என்ற பாகப்பிரிவினை கோரிய வழக்கு எனது சகோதரி ராமலக்ஷ்மி என்பவர் தேனி சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கோரி எனக்கு எதிராகவும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகவும் தாக்கல் செய்து அதுவும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்றும், பூர்வீக சொத்துக்கள் விற்று எனக்கு பாகம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 10.12.2022–ம் தேதியன்று பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டார், அதற்கு முன்பும் பணம் கேட்டார் என்னிடம் இல்லை.

10. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் யார், யார் இருந்தார்கள் என்றால் மணிவண்ணன், பாலமுருகன், சக்திவேல் ஆகியோர்கள் இருந்தார்கள். இந்த விபரங்களை நான் தாக்கல் செய்த பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும்

குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கின் புரோநோட்டில் சாட்சி கையொப்பம் செய்த பாலமுருகன் எனது உறவினர் என்றால் சரிதான். பாலமுருகன் என்ன படித்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது, அவர் வேறு தொழில் செய்து வருகிறார். அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். அவர் வீடும், எனது வீடும் பக்கத்து பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான்.

11. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் பாலமுருகன் எனது வீட்டிற்கு பிரதிவாதிகள் வருவதற்கு முன்பே வந்தாரா அல்லது வந்த பின் வந்தாரா என்றால் இரண்டு நிமிடம் முன்னாலேயே வந்து விட்டார். என்ன காரணத்திற்காக தனக்கு பணம் வேண்டும் என்ற விவரத்தை பிரதிவாதிகள் சாட்சிகளிடம் சொன்னார்கள், கடன் கொஞ்சம் இருப்பதாகவும் அதை அடைத்து விட்டு அவரது மகனை வெளிநாட்டிற்கு அனுப்ப இருப்பதாக பிரதிவாதிகள் சொன்னார்கள். சக்திவேல் என்பவர் தான் புரோநோட்டை எழுதினார், அவரை அதற்கு முன்பு நான் பார்த்திருக்கிறேன்.புரோநோட்டை எழுதுவதற்கு முன்பு நான் சக்திவேலை பார்த்தது கிடையாது.

12. பிரதிவாதி பிரேமா தான் அவரை புரோநோட்டை எழுதுவதற்கு அழைத்து வந்தார். சக்திவேல் யார் என்ன வேலை செய்கிறார், எங்கு குடியிருக்கிறார் என்ற விபரம் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகும் அவர் எங்கு வேலை செய்கிறார் என்ற விவரம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் அவரை பார்த்திருக்கிறேனா என்றால் நீதிமன்றத்தில் பார்த்தேன்.

13. நான் வழக்கு தாக்கல் செய்த வழக்கறிஞர் அலுவலகத்தில் மேற்கண்ட சக்திவேல் குமாஸ்தாவாக வேலை செய்து வருகிறார் என்றால் அது பற்றி விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி புரேநோட்டில் கையெழுத்து போட்டு கொடுத்த பிறகு நான் அந்த புரேநோட்டை வாங்கிப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில்

பிரதிவாதியின் பெயர், கையெழுத்துக்கள், தொகை ஆகிய விபரங்கள் தெளிவாகவும், சரியாகவும் இருந்தது என்றால் சரிதான்.

14. பிரதிவாதிகள் மொத்தம் எத்தனை கையெழுத்துக்கள் போட்டு உள்ளார்கள் என்றால் பிரதிவாதி முத்துஹரிஷ் சாட்சி என்ற இடத்திலும் கையெழுத்து போட்டுள்ளார், அதெல்லாம் புரோநோட்டிலும் கையெழுத்து போட்டுள்ளார். நீதிமன்றத்தில் காட்டக்கூடிய வா.த.சா.ஆ.1 புரோநோட்டில் 1-ம் பிரதிவாதியின் கையெழுத்து முத்திரைவில்லையில் அவரது கையெழுத்து தெளிவில்லாமல் உள்ளது என்றால் சரிதான், அந்த கையெழுத்து முழுமை அடையவில்லை என்றால் சரிதான்.

15. 2-ம் பிரதிவாதி பிரேமா அந்த புரோநோட்டில் பிரேமலதா என்று தான் அந்த புரோ நோட்டில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி முத்துஹரிஷ் முத்திரைவில்லையில் உள்ள அவரது கையெழுத்தும், சாட்சியில் உள்ள அவரது கையெழுத்தும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். முத்திரை வில்லையில் உள்ள 3ம் பிரதிவாதியின் கையெழுத்து அந்த புரோநோட்டில் அடித்தல் திருத்தலாக உள்ளது என்றால் சரியல்ல, முழுமை அடையாமல் உள்ளது என்றால் சரியல்ல.

16. பூர்த்தி செய்யப்பட்ட இங்க்-கிற்கும் கையெழுத்து இடப்பட்ட இங்க்-கிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். புரோநோட்டின் மேலே ரூ.10 லட்சம் என எழுதப்பட்டு அதன் பிறகு புரோநோட்டிற்குள்ளே ஒரு லட்சம் என முதலில் எழுதப்பட்டு அதன் பிறகு ஒரு பூஜ்ஜியம் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவது போல் பிரதிவாதிகள் என்னிடம் எந்த பணமும் பெறவில்லை என்றும், என்னால் இந்த புரோநோட் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

17. 2-ம் பிரதிவாதியான பிரேமா என்னிடம் 16.02.2024, 08.07.2024 ஆகிய தேதிகளில் என்னிடம் வாங்கி இருந்த ரூபாய் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாயை G-pay அக்கவுண்ட் மூலம் எனக்கு திருப்பி செலுத்தி இருந்தார் என்றால்

சரியல்ல. ரூ.4000 மற்றும் ரூ.6000 மட்டுமே இரண்டு முறை எனக்கு 2ம் பிரதிவாதி பிரேமா அனுப்பியிருந்தார். அந்த தொகை வட்டிக்கான தொகை. நான் தாக்கல் செய்த பிராதில் பிரதிவாதிகள் ஒருமுறை கூட வட்டி செலுத்தவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

18. 17.07.2024 ஆம் தேதியன்று துரை என்பவர் மூலமாக இந்த கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அதன் பிறகு தான் இந்த புரோநோட்டானது மோசடியாக என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும், துரையும் சேர்ந்து பேசிய ஆடியோ பதிவுகள் பிரதிவாதிகள் வசம் உள்ளது என்றால் சரியல்ல அந்த ஆடியோ பதிவில் எவ்வளவு ரூபாய் பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தோம் என்ற விபரமும் வட்டி மற்றும் கடன் திருப்பி செலுத்திய விபரமும் எனது வாக்குமூலமாக உள்ளது என்றால் சரியல்ல.

19. பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கும் நோக்கத்தில் அவர்களது கையெழுத்து போலவே மோசடியாக உற்பத்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த புரோநோட் உண்மை தன்மை வாய்ந்தது அல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.13 17:38:53 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.